


தாராபுரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் ஒன்றியம், கோட்டைமருதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் வீதி வீதியாக சென்று பொது மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர் ப.பழனிசாமி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், ஒன்றிய கழக செயலாளர்கள் பி.சி.தங்கம், கே.சி.பாலு உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தாராபுரம் நகரம், 10வது வார்டு த.வெ.க.வைச் சேர்ந்த அஜார், முகமது ஆதில், நியாஸ் ஆகியோர் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்பி., முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், வார்டு செயலாளர் பீர்முகமது சேட், நகர மாணவர் அணி துணை அமைப்பாளர் முகமது முஸ்தபா, அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சிந்தனைச் செல்வன், நகர்மன்ற முன்னாள் உறுப்பினர் முகமது யூசுப், நவநீதன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் ஒன்றியம், சின்னக்காம் பாளையம் பேரூராட்சி, சென்னாக்கல் பாளையத்தில் மடத்துக்குளம் இரா.ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., கும்பகோணம் மாநகர செயலாளர், துணை மேயர் சு.ப.தமிழழகன் முன்னிலையில் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தனர். ப்ரியம் சசிதரன், சு.க.முத்து செல்வம், கோ.தாமரைச்செல்வன், எம்.நாசர், தியாக.சுரேஷ், இரா.விஜயன், நெ.மனோகரன், ஆர்.முருகன். ச.கபிலன், ஆர்.கல்யாணசுந்தரம், காஜா, இளங்கோ (எ) காளியப்பன், செந்தில்குமார், பாலசுப்பிரமணியன், சுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் ஒன்றியம், சின்னக்காம் பாளையம் பேரூராட்சி, தண்ணீர் பந்தல் கிராமத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் மடத்துக்குளம் இரா.ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர் பன்னீர்செல்வம் முன்னிலையில் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தனர். இதில் சென்னிமலை ஒன்றிய செயலாளர் சி.பிரபு, பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் A.வின்சென்ட், ஹாப்பி .ஹர்சத், கழக கல்வியாளர் அணி துணை செயலாளர் டாக்டர்.ஆர்.ராஜ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, துணை அமைப்பாளர் எம்.எஸ்.விஜய் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் தாராபுரம் ஜின்னா மைதானத்தில் உள்ள சின்ன பள்ளிவாசல் ஜமாத் நிர்வாகிகளிடம் ஆதரவு திரட்டினர். இதில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்பி., நெல்லை மத்திய மாவட்ட செயலாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., திருச்சி மேயர் மு.அன்பழகன், நெல்லை கிழக்கு மாநகர செயலாளர் தினேஷ், தாராபுரம் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர்மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, குண்டடம் மேற்கு ஒன்றியம், சடையம்பாளையம் ஊராட்சி, மானூர்பாளையம் பகுதியை சேர்ந்த சபரீஷ்வரன், சிவபிரகாஷ், நவீன், விக்னேஷ், ராமலிங்கம், மாரிமுத்து, சுரேஷ் உள்பட 25க்கும் மேற்பட்டோர் மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகி கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட தேர்தல் பொறுப்பாளர்கள் கழக நிர்வாகிகள், சடையம்பாளையம் ஊராட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோபி ஜி. வெங்கிடு

### செப்டம்பர் 23 (2020)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழக கொள்கையில் ஈர்க்கப்பட்டு பணியாற்றி வந்த இவர், கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினர். தீவிர சுயமரியாதைக்காரர்.

வட்டச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட இலக்கிய அணி தலைவர் – மாநில விவசாய அணி இணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்ததோடு, தலைமைக் கழக பேச்சாளராக தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

கோபி நகர் மன்ற உறுப்பினராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியதோடு, 1996ஆம் ஆண்டு கோபி தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1952–ல் தார்ச்சட்டி ஏந்தி இந்தியை அழித்த போராட்டத்தில் துவங்கி, 1964 இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தில் ஒரு மாதம் சிறைவாசம் அனுபவித்தவர்.

“பொதுமக்களின் சேவகராகத் திகழ்ந்த – கழகத்தின் முன்னணிச் செயல்வீரர்களில் ஒருவரான ஜி.பி.வெங்கிடு அவர்களின் மறைவு கழகத்திற்குப் பேரிழப்பாகும். ” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## மதுரை மீனாட்சி கோவில் குடமுழுக்கில் முறைகேடு!

மதுரை, செப்.23-

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா வின்போது VIP பாஸ் விற்பனை செய்யப்பட்டதாக எழுந்துள்ள புகார், மிகப்பெரிய அதிர்வலை களை மதுரை முழுவதும் உண்டாக்கியுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் குட முழுக்கு விழா காணவரும் பக்தர்களுக்காக 2000 பாஸ்கள் ஆன்லைன் மூலம் பக்தர்களுக்கு விநியோ கிக்கப்பட்டது. உபயதாரர்கள் மற்றும் நன்கொடையாளர்க ளுக்காக பாஸ் அளிக்கப்பட்டி ருந்த நிலையில் அதில் 3000 பாஸ்களை இந்து சமய அறநி லைத்துறை அமைச்சர் ரமேஷ், 3500 பாஸ்களை அமைச்சர் நிர்மல் குமாரும் வாங்கிச் சென் றதாக புகார் எழுந்தது.

மேலும் கோயில் நிர்வாகம் சார்பில் உபயதாரர்களுக்கு 2000 பாஸ்கள் மட்டுமே வழங் கபட்டதாக வும் சர்ச்சை எழுந் தது. அமைச்சர்கள் வாங்கிச் சென்ற பாஸ்களை ஆயிரக்க ணக்கில் பேரம் பேசி விற்பனை செய்யப்பட்டதாகவும் எதிர்க்கட் சிகள் குற்றம் சாட்டின.

இந்த நிலையில் வி.ஐ.பி. பாஸ் விற்பனை செய்யப்பட்ட தாக புகார் எழுந்துள்ள நிலை யில் இது மாநிலம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி யது. இந்த நிலையில் அறநிலை யத்துறை அமைச்சர் ரமேஷ் மீது எழுந்துள்ள இந்த புகார் குறித்து விளக்கம் அளிக்க முதல்வர் அலுவலகம் உத்தர விட்டதாக கூறப்படுகிறது.

அமைச்சர் ரமேஷ் பொறுப் பேற்ற பிறகு அவர் மீது முதல் விசாரணை நடந்திருப்பது இந்து சமய அறநிலைத்துறை வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

## மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, செப். 23-

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற் றும் ராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்டங்களில் செப்., 23,24ல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது

அதன் அறிக்கை: வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திரு வண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களில் நேற்று (செப் 21) ஓரிரு இடங்களில் இடி மின் னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூ டும். அதேபோல், இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங் கள், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, கள்ளக்குறிச்சி, ஈரோடு, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி, பெரம்பலூர், அரி யலூர், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்க ளில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மித மான மழை பெய்யக்கூடும்.

மேற்கு தொடர்ச்சி மாவட் டங்கள் மற்றும் தென் தமிழகத் தில் ஓரிரு இடங்களில் இன்று (செப் 22) இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மித மான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற் றும் ராணிப்பேட்டை ஆகிய 5 மாவட்டங்களில் செப்., 23,24ல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ் வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ. வாசுதேவன்

### செப்டம்பர் 23 (2023)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

செவ்வாய்ப்பேட்டை கிளை செயலாளராகவும், அவைத்தலைவராக பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறவழிப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**